குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 18/2011

அ.சா. 2

2024–ம் ஆண்டு ஜனவரி 09 –ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி –02 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவக்குமார் | ஜாதி | |
| தந்தை பெயர் | பொன்னுசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 1.12 மணி,

Accused A2.Murugan, A3. Chandrasekar present. A1.Nallusamy absent. Petition u/s 317 Cr.P.C filed and allowed. . Advocate Mr. Siddharth shankar present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது காமலாபுரம் பிரிவில் குடியிருந்து கொண்டு லோடு லாரிகளுக்கு கயிறு கட்டும் வேலை செய்து வருகிறேன். 01.12.2010 ம் தேதி ஆர்.சி.செட்டிபட்டி ரவுண்டானா அருகே வழக்கமாக கயிறு கட்டும் இடத்தில் இருந்தேன். அப்போது மதியம் 2 நபர்கள் வந்து எங்களிடம் லாரி ஏதாவது நின்றதா என்னிடம் கேட்டார்கள். நாங்கள் அவர்களிடம் லாரி ஏதும் நிற்கவில்லை என்று சொன்னோம். அவர்கள் சென்று விட்டார்கள்.

2. அன்றைய தினம் மாலை போலீஸார் வந்து நாங்கள் வேலை செய்யும் இடத்தில் லாரி ஏதாவது நின்றதா என்று கேட்டார்கள். நாங்கள் அவர்களிடம் லாரி ஏதும் நிற்க்கவில்லை என்று சொன்னோம். போலீஸார் எங்களிம் விசாரித்த லாரியின் பதிவெண் தற்போது ஞாபகம் இல்லை. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரனை:**

3. நான் சுமார் 15 வருடங்களாக கயிறு கட்டும் தொழில் செய்து வருகிறேன். ஓமலூரில் சுமார் 10 இடங்களில் லாரிகளுக்கு கயிறு கட்டுவார்கள். கயிறு கட்டும் தொழில் செய்பவர்களுக்கு தனியாக அலுவலகமோ அல்லது நலக்கூட்டமோ இல்லை. தினமும் மதியம் 02.00 மணிக்கு ஆர்.சி.செட்டிப்பட்டி ரவுண்டானா அருகே கயிறு கட்டுவதற்காக வந்து மாலை சென்று விடுவேன். வேலை அதிகம் இருந்தால் இரவு 11.00 மணிக்கு செல்வேன்.

4. சம்பவத்தன்று சம்பவ இடத்தில் நாங்கள் 6 நபர்கள் இருந்தோம். மேற்படி 6 நபர்களும் என்னுடனே வந்து செல்வார்கள். அவர்களது வீடு எனது வீட்டிற்கும் பக்கத்தில் தான் உள்ளது. சம்பவத்தன்று போலீஸார் போலீஸ் ஜீப்பில் வந்தார்கள். எத்தனை போலீஸார் வந்தார்கள் என்று தெரியவில்லை. நான் முதல் விசாரணையில் கூறியது போல் சம்பவம் எதுவும் நடைபெற வில்லை என்றாலும் போலீஸார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. போலீஸார் என்னை ஒருமுறை விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை போலீஸார் விசாரணையில் கூறவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் கூறியுள்ள சம்பவ தேதியை போலீஸார் என்னிடம் கூறவில்லை.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 1.22 மணி,

ஓம்/–எஸ்.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.